

# தொல்காப்பியம்

## சொல்லும் சிந்தனைகளும்



தமிழய்யா வெளியீட்டகம்

# ..ால்காப்பிய ..லதிகாரமே....! விளிமரபு



இரா.விசயன்,
ஆய்வாளர்,
வடவள்ளி, கோவை.

## முன்னுரை

விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே (தொல்.சொல்.62) வேற்றுமை இயல் என்பது பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்திய வாறு எனின் ஒருபொருளை ஒருகால் வினை முதலாக்கியும், ஒருகால் செயப்படுபொருளாக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும் ஒரு கால் உடையது ஆக்கியும், ஒரு கால் இடமாக்கியும் இவ்வாறு வேறுபடுத்துவது என்க என்பார் தெய்வச்சிலையார். இவற்றுள் தனக்கெனத் தனி உருபேதுமின்றி பெயரினது விகாரமே உருபாக ஏற்று மற்ற வேற்றுமை உருபுகளிடத்து இல்லாத சில சிறப்பியல்புகளைத் தன்னிடத்தே கொண்டு இலக்கியச் சிந்தனை போல் இலக்கணச் சிந்தனையையும் நம்பால் பெருக விடுகின்ற தனித்தன்மை வாய்ந்த விளிமரபை ஆய்வதே இவன் நோக்கமாகும்.

மற்ற வேற்றுமை உருபுகளிடத்து அமையாத சில சிறப்பியல்புகள் விளிமரபிற்கு உண்டு. அவை

1.இவைகள் இரட்டிப்பதோ சாரியை பெறுவதோ இல்லை
2. தமக்கெனத் தனி உருபுகள் ஏதும் இல்லை
3. உருபுமயக்கம் என்பதும் இதற்கில்லை
4. வேற்றுமையில் உருபு வெளிப்படும். விளிமரபில் தொக்கி நிற்கும்
5. விளியில் இசையமுத்தம் அமையும்.

விளியானது வேற்றுமை அல்ல, வேற்றுமைகள் ஏழு என்றும், அவைதான் தமக்கென உருபைக் கொண்டு பொருள்களை வேறுபடுத்தகின்றன என்றும் கருத்துப் பின்னாளில் எழும் என்பதை அறிந்த தொல்காப்பியர் வேற்றுமைகள் விளியோடு சேர்ந்து எட்டே என தமது இலக்கணச் சிந்தனையை முன் வைக்கின்றார்.

அவைதாம்
பெயர் ஐஒடுகு
இன் அதுகண் விளி என்னும் ஈற்றே (தொல்.சொல்.64)

விளி என்பதன் இயல்பு இஃது எனக் கோடிட்டுக் காட்ட முனைந்த





தொல்காப்பியர், விளியெனப்படுவ கொள்ளும் பெயரொடு தெளியத்தோன்றும் இயற்கைய என்ப (தொல்.சொல்.115) அஃதாவது, விளியெனப்படுபவை தம்மை ஏற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும் இயல்புடையவை என்பதையும், தெளிய என்பதற்கு அழைக்க எனும் பொருளைநாமே ஏற்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்கின்றார் காப்பியர்.

விளியின் இயல்பானது இது என சுட்டிய தொல்காப்பியர் உயர்திணையில் விளியேற்கும் இயல்புகளைத் தொடர்ந்து வரும் நூற்பாவில் விளக்குகிறார். அவைதாம்

இ உ ஐ ஒ என்னும் இறுதி
அப்பால் நான்கே........ (தொல்.சொல்.117)

இ, உ, ஐ, ஒ, என்னும் இறுதிகளைப் பெற்று நால்வகையாக வரும் பெயரே உயர்திணையிடத்துப் பொருள் சுட்டி வரும் விளிகொள் பெயராகும்.

| | | | |
|---|---|---|---|
| (எடு) நம்பி | நம்பீ | நங்கை | நங்காய் |
| இ | ஈ | ஐ | ஆய் |
| எந்தை | எந்தாய் | | |
| ஐ | ஆய் | | |

இவ்விடத்து இ ஆனது ஈ யாகவும் ஐ ஆனது ஆய் யாகவும் விளியேற்பதை, அவற்றுள் இஈயாகும் ஐ ஆயாகும்... (தொல்.சொல்.118) எனத் தொல்காப்பியர் விளக்கியிருப்பது விளியின் சிறப்பைத் தெள்ளிதின் விளங்க வைப்பதாகும். இவற்றிற்குப் புறனடையாக, முறைப்பெயரிடத்து ஐ - ஆய் ஆகாது ஆ காரத்தோடு வரும் என்பதையும் விளக்குகின்றார்.

முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருவதற்கு உரியவும் உளவே (தொல்.சொல்.123)

| | | | |
|---|---|---|---|
| (எடு) அன்னை | அன்னா | அத்தை | அத்தா |
| ஐ | ஆ | ஐ | ஆ |

உயர்திணையில் இ,உ, ஐ, ஒ என்னும் உயிர்கள் மட்டுமே விளியேற்கும் என்பதையும் இதன்மூலம் விளக்குகின்றார். உயர்திணையில் விளியேற்கும் புள்ளியீறுகள் பற்றி விளக்குகையில்,

னரலள என்னும் அந்நான்கென்ப
புள்ளி இறுதி விளிகொள்பெயரே (தொல்.சொல்.125)

புள்ளியிறுதி விளிகொள் பெயர்கள் ன,ர,ல,ள என்னும் ஈற்றினையுடைய இந்நான்கென்ப என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றார் தொல்காப்பியர்.

அன்னென் இறுதி ஆவாகும்மே (தொல்.சொல்.127)

என்பதற்கு ஆண்பாலைக் குறித்து வரும் அன் என்னும் பெயர் இறுதி ஆ வாகி விளியேற்கும் என்ற கருத்துப் பெறப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| (எடு) சோழன்சோழா | | அன் | ஆ |
| வெற்பன் | வெற்பா | அன் | ஆ |

அண்மை விளிக்கண் அன் அ கரமாகவே நிற்கும் என்பதையும் விளக்குகின்றார்.

| | | | |
|---|---|---|---|
| (எடு) சோழன் | சோழ | அன் | அ |
| வெற்பன் | வெற்ப | அன் | அ |

இவை போன்றே, ஆவென் இறுதி இயற்கையாகும்.
(தொல்.சொல்.129)

(எடு) சேரமான் - சேரமான்.

தொழிலில் கூறும் ஆவென் இறுதி
ஆயாகும்மே விளிவயினான (சொல்.130)

எடு: உண்டான் - உண்டாய்

பண்புகொள் பெயரும் அதனோரற்றே (சொல்.131)

எடு: கரியான் - கரியாய்

முறைப் பெயர் கிளவி ஏயோடு வருமே (சொல்.133)

எடு: மகன் - மகனே

என நுட்பமான முறையில் உயர்திணையில் விளியேற்கும் ன கர புள்ளி ஈறுகளின் தன்மையை விளக்கிய தொல்காப்பியர் ர கர ஈற்றை எடுத்துக்காட்டும்போது,

ஆடும் அருவும் ஈரொடு சிவணும் (தொல்.சொல்.135)

ர கரவீற்றுள் ஆர், அர் என நின்ற இரண்டும் ஈ என விளி ஏற்கும் என்பதைத் தெளிவாக்குகின்றார்.

| | | | |
|---|---|---|---|
| எடு: பார்ப்பார் | பார்ப்பீர் | ஆர் | ஈர் |
| கூத்தர் | கூத்தீர் | அர் | ஈர் |

என்பதில் சுட்டு முதலாகிய ர கர ஈறு விளியேற்பதில்லை என்பதை சுட்டு முதற் பெயரே முற்கிளந்தன்ன (சொல்.139) என்னும் நூற்பாவின்வழி விளக்குகின்றார் தொல்காப்பியர்.

எடு: அவர், இவர், உவர்,

ல, கர, ள கர ஈற்றுப் பெயர்கள் விளியேற்கும் தன்மையை விளக்கிட முனைந்த தொல்காப்பியர்.

புள்ளியும், உயிருமாகிய எழுத்திணை ஈறாகவுள்ள அஃறிணைப் பெயர் எல்லாம் விளிகொள்ளும் போது ஏ காரம் பெறும் என்பதையும் முன்வைக்கின்றார்.

எடு.

| | | |
|---|---|---|
| புலி - | புலியே | ஏ |
| பூ - | பூவே | ஏ |
| வண்டு - | வண்டே | ஏ |





| | | |
|---|---|---|
| கடல் - | கடலே | ஏ |

விரவுப்பெயரோ உயர்திணைப் பெயர் போன்றே அமையும் என்பதைத் தமது நூற்பா வழி சிந்தனைக்கு விருந்தாக்குகின்றார்

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்கும் காலை (தொல்.சொல்.147)

இவ்வாறு விளிவேற்றுமைகள் உயர்திணை, அஃறிணை எனும் நிலையில் விளியேற்பதைத் தமது நுழைபுலத்தால் தொல்காப்பியர் வெளிப்படுத்துவதிலிருந்தே இவற்றின் தனிப்பண்புகள் தெளிவாகின்றன. மற்றைய வேற்றுமை உருபுகளிடத்து இல்லாத சில சிறப்பியல்புகள் விளியடத்தே இருப்பதால்தான் தொல்காப்பியர் இதை வேற்றுமையியலில் கூறாமல் தனி அதிகாரமாக்கி வைத்தார் என அறிஞர்கள் சுட்டும் கூற்றில் உண்மையில்லாமல் இல்லை.

**தொகுப்புரை**

1.பொதுவாக ஏனைய வேற்றுமைள் ஒரு தொடரின் அகத்துறுப்பாக வரும். விளிவேற்றுமையோ புறத்துறுப்பாக வரும். 2. ஏனைய வேற்றுமைச் சொற்கள் ஒரு வாக்கியத்தில் உறுப்பாக அமைய, விளியோ தானே ஒரு சிறு வாக்கியமாக அமையும். 3.விளிவேற்றுமைச் சொற்கள் தொடரில் அடுத்து வரும் பிற சொற்களுடன் நேரடித் தொடர்புடன் அமைவதில்லை. 4.பொதுவாக அம் ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது அத்துச் சாரியைப் பெற்றுவரும். ஆனால் விளியேற்கும் போதுஅத்துச் சாரியை பெறுவதில்லை. 5. குறு ஆகிய ஈற்றுக் குற்றுகரப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது ஒற்று இரட்டிக்கும். விளியேற்கும்போது ஒற்று இரட்டிப்பதில்லை. 6.விளிவேற்றுமைச் சொற்கள் பிற வேற்றுமைச் சொற்களைப் போன்று வேற்றுமையடிகளைக் கொண்டு வருவதில்லை. 7.பெயரின் அடிப்படையில் தோன்றுவதால் இவற்றையும் விளிவேற்றுமைச் சொற்கள் என்றும், தனித்து விளிவேற்றுமை என்றும் குறிப்பிட்டனர். 8.மேலும் நாம் சொல்லப்போவதாகக் கேட்கும் படியாக ஒருவரை அழைப்பதற்காகவே இவ் வேற்றுமைச் சொற்கள் பயன்படுகின்றவேயன்றிச் சொல்லப் போகும் செய்தியில் இவை எத்தகைய பங்கையும் ஏற்பதில்லை.